அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2021 (2022)

## 47 - இஸ்லாமிய நாகரிகம்

## புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

## பரீட்சகர்களுக்கான பொது அறிவுறுத்தல்கள்

### 47 - இஸ்லாமிய நாகரிகம்

1. நீங்கள் பொறுப்பேற்றுள்ள இப்பணி மாணவர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் ஒன்றாதலால் மிகப் பொறுப்புணர்ச்சியோடு நிறைவேற்ற வேண்டியதொன்றாகும்.
2. இப்பணியில் நீங்கள் மிக நேர்மையாக நடக்க வேண்டுமென்பது பரீட்சைகள் திணைக்களத்தின் எதிர்பார்ப்பாகும்.
3. இப்பணி, மறுமையில் அல்லாஹ்விடத்தில் பதில் சொல்ல வேண்டிய ஒரு செயல் என்பதை நீங்கள் நினைவில் வைத்துக் கொள்வது உங்களது செயற்பாடுகளை நேர்மையாக முன்னெடுத்துச் செல்வதற்கு நிச்சயம் உதவும்.
4. **புள்ளித்திட்டம்**

   புள்ளித்திட்டம் பரீட்சகர்களிடையே ஒரு முகப்பாட்டை ஏற்படுத்துமாதலால், மாணவர்கள் நியாயமான முறையில் மதிப்பீடு செய்யப்படுவதற்காக, புள்ளித்திட்டத்தை முழுமையாகப் பின்பற்றுவது மிக அவசியமாகும்.
5. **அறிவுறுத்தல்கள்**

   பரீட்சைகள் திணைக்களம் முன்வைத்துள்ள அனைத்து அறிவுறுத்தல்களையும் பரீட்சகர்கள் முழுமையாகப் பின்பற்றுதல் அவசியமாகும்.
6. **விடைத்தாள் மதிப்பீடு**

   விடைத்தாள்களை மதிப்பிடும் பணியை ஆரம்பிக்க முன் ஒவ்வொரு வினாவுக்கும் மாணவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் விடை யாது என்பதை புள்ளித்திட்டத்தை நன்கு வாசித்து விளங்கிக் கொள்ளல் வேண்டும். மேலதிக விளக்கங்கள் தேவைப்படின் பிரதம கட்டுப்பாட்டாளர்/ பிரதம பரீட்சகரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளலாம்.
7. **புள்ளி வழங்கும் ஒழுங்கு.**

   வினாப்பத்திரம் 01

   இதில் 50 வினாக்கள் உண்டு. ஒவ்வொரு வினாவுக்கும் 01 புள்ளிகள் வீதம் மொத்தம் 50 வினாக்களுக்கும் 50 புள்ளிகள் வழங்கப்படும்.

   வினாப்பத்திரம் 02

   இதில் பகுதி I பகுதி II என இரு பகுதிகள் உள்ளன. பகுதி I ஒவ்வொன்றும் ஐந்து பிரிவுகளைக் கொண்ட மூன்று வினாக்களை உள்ளடக்கியுள்ளது. பகுதி II ஒவ்வொன்றும் இரண்டு பிரிவுகளைக் கொண்ட ஐந்து வினாக்களை உள்ளடக்கியுள்ளது. பகுதி I ல் இரண்டு வினாக்களுக்கும், பகுதி II ல் மூன்று வினாக்களுக்கும் பரீட்சார்த்திகள் விடையளித்தல் வேண்டும். ஒவ்வொரு வினாவுக்கும் 20 புள்ளிகள் வழங்கப்படும்.

| புள்ளிகள் வழங்கப்படும் ஒழுங்கு | | |
|---|---|---|
| வினாப்பத்திரம் I<br>50 வினாக்கள்,<br>தலா 01 புள்ளிகள் | 50 x 01 | **50** |
| வினாப்பத்திரம் II<br>பகுதி I 02 வினாகைள்<br>பகுதி II 03 வினாக்கள்<br>தலா 20 புள்ளிகள் | 02 x 20<br>03 x 20 | 40<br>60 |

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ..................................................................... ✓ △ 4/5
.....................................................................
.....................................................................

(ii) ..................................................................... ✓ △ 3/5
.....................................................................
.....................................................................

(iii) ..................................................................... ✓ △ 3/5
.....................................................................
.....................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

## கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும்.

○ ○ ○

AL/2021(2022)/47/T-I

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

ඉස්ලාම් ශිෂ්ටාචාරය I
இஸ்லாமிய நாகரிகம் I
Islamic Civilization I

**47 T I**

පැය දෙකයි
*இரண்டு மணித்தியாலம்*
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** இஸ்லாமிய சட்டத்தில் 'ரப்பானிய்யா' என்பதன் பொருள் யாது?
(1) பூரணத்துவம் (2) தெய்வீகத்தன்மை (3) நீதி, நியாயம்
(4) யதார்த்தம் (5) பொதுத்தன்மை

**2.** அல் - குர்ஆன் தொகுப்பில் தொடர்புடைய ஸஹாபாக்கள் இருவரைச் சுட்டும் சரியான தொகுதியினைத் தெரிவுசெய்க.
(1) உமர் (ரழி) - முஸ்அப் பின் உமைர் (ரழி)
(2) ஸைத் பின் ஸாபித் (ரழி) - முஆத் பின் ஜபல் (ரழி)
(3) அபூபக்ர் (ரழி) - அப்துர் ரஹ்மான் பின் அவ்ப் (ரழி)
(4) உமர் (ரழி) - ஹுதைபதுல் யமானி (ரழி)
(5) உஸ்மான் (ரழி) - ஸஅத் பின் அபீ வக்காஸ் (ரழி)

**3.** 'இபாரதுன்னஸ்' என்பது
(1) சட்டத்துடன் தொடர்பான நியமங்களாகும்.
(2) அல் - குர்ஆன் வசனத்துக்கான சட்ட விளக்கங்களாகும்.
(3) தெளிவான சட்டங்களாகும்.
(4) சட்ட வசனத்திலிருந்து பெறப்படும் தீர்ப்புக்களாகும்.
(5) அல் - குர்ஆன் சட்ட வசனத்தை விளக்கும் ஹதீஸ் வாசகங்களாகும்.

**4.** இஸ்லாமிய நாகரிகத்தின் அடிப்படைகளுள் பிரதான ஒன்று
(1) முஹாஸபா எனும் சுய விசாரணையாகும்.
(2) முனாஜாத் எனும் இறை உறவாகும்.
(3) ஸுஹ்த் எனும் பற்றற்ற வாழ்வாகும்.
(4) மஆத் பற்றிய நம்பிக்கையாகும்.
(5) இமாரத் செயற்பாடாகும்.

**5.** பின்வருவோருள் இலங்கையில் இஸ்லாத்தின் அறிமுகத்தோடு தொடர்புபடும் ஸஹாபி
(1) ஸஅத் பின் அபீ வக்காஸ் (ரழி) ஆவார்.
(2) வஹப் பின் அபீ கப்ஷா (ரழி) ஆவார்.
(3) அப்துர் ரஹ்மான் பின் அபீ பக்ர் (ரழி) ஆவார்.
(4) முஆவியா பின் அபீ ஸுப்யான் (ரழி) ஆவார்.
(5) ஜஃபர் பின் அபீ தாலிப் (ரழி) ஆவார்.

6. நாடுகாண் பயணி இப்னு பதூதா அவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்த நூற்றாண்டு
(1) கி. பி. 12 (2) கி. பி. 13 (3) கி. பி. 14
(4) கி. பி. 15 (5) கி. பி. 16

7. பின்வரும் கூற்றுகளைக் கவனத்திற் கொள்க.
A - மறுமையில் எவருக்கும் அல்லாஹ்வைக் காண முடியாது.
B - அல்லாஹ்வின் தாத், சிபாத் வெவ்வேறானவைகளாகும்.
மேற்படி கருத்துக்களுடன் தொடர்புடையவர்கள் முறையே
(1) மு.்.தஸிலாக்களும் - முர்ஜிஆக்களும் ஆவர்.
(2) அஷ்அரிய்யாக்களும் - முர்ஜிஆக்களும் ஆவர்.
(3) காரிஜிகளும் - அஷ்அரிய்யாக்களும் ஆவர்.
(4) ஷீஆக்களும் - காரிஜிகளும் ஆவர்.
(5) மு.்.தஸிலாக்களும் - அஷ்அரிய்யாக்களும் ஆவர்.

8. "இலங்கைச் சோனகர் இன வரலாறு - ஒரு திறனாய்வு" எனும் நூலின் உள்ளடக்கம்
(1) ஒரு இனத்தின் வரலாற்றை, பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள் ஊடாக அன்றி இரத்தத் தொடர்பின் மூலமே தீர்மானிக்க முடியும் என்பதாகும்.
(2) இலங்கை முஸ்லிம்கள் தென்னிந்திய முஸ்லிம்களின் வழித்தோன்றல்கள் என்பதாகும்.
(3) ஐரோப்பியரின் இலங்கை வருகைக்கு முன்னரே முஸ்லிம்கள் இலங்கையில் நிரந்தரக் குடியிருப்புக்களை அமைத்திருந்தனர் என்பதாகும்.
(4) ஆரம்ப முதலே இலங்கை முஸ்லிம்கள் நாட்டின் கரையோரம் மற்றும் உள்நாட்டுப் பகுதிகளில் வாழ்ந்து வந்தனர் என்பதாகும்.
(5) கண்டி இராசதானியில் முஸ்லிம்கள் பல்வேறு திணைக்களங்களில் மேற்பார்வையாளர்களாகவும் பணியாளர்களாகவும் இருந்தனர் என்பதாகும்.

9. "மார்க்கத்தில் நிர்ப்பந்தம் இல்லை" என்ற அல்-குர்ஆன் வசனம் உணர்த்தும் கருத்து
(1) சமய நடவடிக்கைகள் விட்டுக் கொடுப்புக்கு உரியனவாகும்.
(2) மனிதர்கள் அனைவரும் சட்டத்தின் முன் சமனாக நடாத்தப்பட வேண்டும்.
(3) எந்த ஒருவருக்கும், தான் பின்பற்றும் கொள்கையைப் பிறர் மீது திணிக்க முடியாது.
(4) சமயங்கள், மொழிகள், கலாசாரங்கள் போன்றன இறை நியதிகளாகும்.
(5) விரும்பிய விதத்தில் சமய நம்பிக்கைகளை மாற்றிக் கொள்ள முடியும்.

10. 'அர்ரைஹானி' எனப்படுவது
(1) ஒரு வகை சிகிச்சை முறையாகும்.
(2) சுவர்க்கங்களுள் ஒன்றாகும்.
(3) இசைக் கருவி ஒன்றின் பெயராகும்.
(4) அறபு எழுத்து வடிவமொன்றாகும்.
(5) கவிதை அமைப்பொன்றாகும்.

11. நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வருகை தந்ததும் அங்கு முதன்மைப்படுத்திய மூன்று விடயங்களும் முறையே
(1) முஸ்லிம்களின் பாதுகாப்பு, யுத்த முஸ்தீபு, த.்.வா விரிவாக்கம் ஆகும்.
(2) மஸ்ஜித் நிர்மாணம், சகோதர பிணைப்பு, மதீனா சாசனம் ஆகும்.
(3) மஸ்ஜித் நிர்மாணம், சிறார் கல்வி, அயல்நாட்டு உறவு ஆகும்.
(4) த.்.வா விரிவாக்கம், அடிமை விடுதலை, யுத்த முஸ்தீபு ஆகும்.
(5) சகோதர பிணைப்பு, பொருளாதார மேம்பாடு, மதீனா சாசனம் ஆகும்.

12. இஸ்லாமிய நாகரிகத்தின் சிறப்புப் பண்பாக அமைவது
(1) முஸ்லிம் பெரும்பான்மைச் சமூகத்தை மாத்திரம் இலக்காகக் கொண்டது.
(2) ஆன்மிக விடயங்களுக்கு மாத்திரம் அழுத்தம் கொடுப்பது.
(3) இறுக்கமான சட்ட விதிகளோடு மட்டுப்படுத்தப்பட்டது.
(4) லௌகீக விடயங்களில் மிகைத்திருப்பது.
(5) வாழ்க்கைக்கான வழிகாட்டல்களைப் பெறுவதில் வஹி மற்றும் பகுத்தறிவைத் துணையாகக் கொண்டிருப்பது.

[பக். 2 ஐப் பார்க்க

**13.** அல் - குர்ஆன் வசனங்கள் தொகுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் விதத்தில் உமர் (ரழி) அவர்களால் முன்வைக்கப்பட்ட நியாயம்
(1) அல் - குர்ஆனுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான நெருக்கம் துண்டிக்கப்படலாம் என்ற அச்சம் ஆகும்.
(2) மூத்த ஸஹாபாக்கள் முன்னிலையிலேயே அல் - குர்ஆனைத் தொகுப்புச் செய்வது பொருத்தமானது என்ற கருத்து ஆகும்.
(3) ஸஹாபாக்களிடம் தனிப்பட்டதாகக் காணப்பட்ட அல் - குர்ஆன் வசனங்களின் எழுத்துப் பிரதிகள் அழிந்து போகலாம் என்ற அச்சம் ஆகும்.
(4) அல் - குர்ஆனை மனனம் செய்திருந்த ஹாபிழ்கள் போராட்டங்களில் கொலையுண்டமை ஆகும்.
(5) ஸைத் பின் ஸாபித் (ரழி) அவர்கள் உயிருடன் இருக்கும் போதே அல் - குர்ஆனைத் தொகுப்பது பொருத்தமானதாக அமையும் என்ற கணிப்பு ஆகும்.

**14.** பின்வருவனவற்றுள் வஹி தொடர்பான சரியான கூற்று யாது?
(1) ஹதீஸ் குத்ஸியும் 'வஹியுன் மத்லுவ்வுன்' என்ற ஓதிக் காண்பிக்கப்பட்ட வஹியைச் சார்ந்ததாகும்.
(2) நபிமார்களுக்கும் ரஸூல்மார்களுக்கும் மாத்திரமே அல்லாஹ் வஹியை அருளியுள்ளான்.
(3) அல்லாஹ் வஹியை அருளும் போது அதற்குச் சாட்சியாக மலக்குகளையும் நியமித்திருந்தான்.
(4) முஜ்தஹித்களுக்கும் வஹி மூலம் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன.
(5) அல்லாஹ் ஆன்மீகப் பலம் கொண்ட நல்லடியார்களுக்கும் வஹியை அருளுகின்றான்.

**15.** இஸ்லாமிய சிந்தனையைப் பாதுகாத்தல் என்ற விடயத்தில் இமாம் ஸிர்ஹின்த் (ரஹ்) அவர்களின் எதிர்ப்புக்குள்ளான ஆட்சியாளர்
(1) மன்னர் அக்பர் (2) கலீபா முதவக்கில் (3) மன்னர் ஹுமாயூன்
(4) கலீபா ஹிஷாம் (5) மன்னர் ஷாஹ்ஜஹான்

**16.** "பூமி சூரியனைச் சுற்றி வருகின்றது" என்ற கருத்தை முதலில் முன்வைத்த முஸ்லிம் அறிஞர்
(1) இப்றாஹிம் அல் - பஸாரி ஆவார்.
(2) அபூ மஹ்ஷர் ஆவார்.
(3) அபூ ஸஈத் அஸ் - ஸன்ஜரி ஆவார்.
(4) முஹம்மத் அல் - பிரூனி ஆவார்.
(5) அஹமத் அல் - பர்கான் ஆவார்.

**17.** மதீனா ஹிஜ்ரத்துக்கு பிரதான நோக்கமாக அமைந்த விடயம்
(1) இஸ்லாத்தின் தூதைப் பிரச்சாரம் செய்வதாகும்.
(2) குறைஷிகளின் கொடுமைகளிலிருந்து விடுதலை பெறுவதாகும்.
(3) குறைஷிகளின் எதிர் நடவடிக்கைகளை முறியடித்தலாகும்.
(4) முஸ்லிம்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தலாகும்.
(5) உறவினர்களைச் சந்தித்தல் ஆகும்.

**18.** 'அஸ்மாஉர் ரிஜால்' என்பது
(1) முஸ்லிம் புவியியல் அறிஞர்களின் வாழ்க்கை வரலாறாகும்.
(2) ஹதீஸ் அறிவிப்பாளர்களது வாழ்க்கை வரலாறாகும்.
(3) முஸ்லிம் ஆட்சியாளர்களின் வாழ்க்கை வரலாறாகும்.
(4) அறபு எழுத்தணிக் கலைஞர்களின் வாழ்க்கை வரலாறாகும்.
(5) இஸ்லாமிய சட்டக்கலை அறிஞர்களின் வாழ்க்கை வரலாறாகும்.

**19.** 'உம்மதன் வஸதன்' என்பது
(1) சிறந்த சமூகம் ஆகும். (2) நடுநிலைச் சமூகம் ஆகும்.
(3) வளர்ந்த சமூகம் ஆகும். (4) முன்னோடிச் சமூகம் ஆகும்.
(5) அறிவார்ந்த சமூகம் ஆகும்.

**20.** 'மஸ்லஹா' அடிப்படையில் பெறப்பட்ட தீர்ப்பொன்றுக்கு சிறந்த உதாரணம்
(1) போதைப் பொருட்கள் ஹராமானவை எனும் தீர்ப்பு
(2) பெண்களுக்குத் தங்கம் ஹலாலானது என்ற தீர்ப்பு
(3) மது பாவனைக்காகக் கசையடி வழங்குதல்
(4) ஆஷூரா தினத்தில் நோன்பு நோற்பது
(5) சிறைச்சாலைகள் தோற்றுவிக்கப்பட்டமை

**21.** பின்வருவனவற்றுள் தஜ்தீத் தொடர்பான மிகச் சரியான கூற்றுகளைச் சுட்டும் தொகுதியினைத் தெரிவு செய்க.

A - முஜத்தித் எனப்படுவோர் தம்மைத் தாமே முஜத்தித் எனப் பிரகடனப்படுத்திக் கொள்பவர்களாவர்.
B - இமாம் ஹஸனுல் பஷரி (ரஹ்) அவர்கள் ஆரம்ப கால முஜத்தித்களுள் ஒருவராவார்.
C - மனித நலன்களை அடிப்படையாகக் கொண்டு இஸ்லாத்தின் அனைத்து அம்சங்களிலும் தஜ்தீத் இடம்பெற முடியும்.
D - முஜத்தித்கள் சகல அறிவியல் துறைகளிலும் பாண்டித்தியம் பெற்றிருப்பது கட்டாயமானதல்ல.

(1) A, B (2) A, D (3) A, C
(4) B, D (5) B, C

**22.** ஒருவர் தனது மனைவியுடன் அவளது சிற்றன்னையையும் திருமணம் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிடும் சட்டமூலம் எது?

(1) அல் - குர்ஆன் (2) அல் - ஹதீஸ் (3) அல் - இஜ்மா஁
(4) அல் - உர்பு (5) மஸ்லஹா முர்ஸலா

**23.** மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களால் நிறுவப்பட்ட அறபுக் கல்லூரி ஒன்றையும் அவரால் எழுதப்பட்ட நூல் ஒன்றையும் காட்டும் தெரிவு யாது?

(1) மத்ரஸதுல் பாரி - துஹ்பதுன் நஹ்வு
(2) மத்ரஸதுல் மக்கியா - பத்ஹுத்தையான்
(3) மத்ரஸதுல் ஹிழ்ரிய்யா - மவாகிதுஸ்ஸலாத்
(4) மத்ரஸதுல் பாரி - பத்ஹுத்தைய்யான்
(5) மத்ரஸதுல் மக்கியா - ஷுரூதுஸ்ஸலாத்

**24.** பின்வருவன, ஹதீஸ்களுடன் தொடர்புபடும் சில விடயங்கள் ஆகும்.

A - இஸ்னாதில் முறிவு ஏற்பட்டிருத்தல்
B - ராவீக்களில் குறைபாடுகள் காணப்படல்
C - குறைந்த எண்ணிக்கை கொண்ட ராவீக்களால் அறிவிப்புச் செய்யப்பட்டிருத்தல்
D - ஸஹீஹான ஹதீஸுக்கு முரணாக இருத்தல்
E - நபிகளாரின் வபாத்துக்கு மிக அண்மித்த காலத்தில் ரிவாயத் செய்யப்பட்டிருத்தல்

மேற்குறிப்பிட்டவற்றுள் ஹதீஸ் ஒன்று நிராகரிக்கப்படுவதற்கான காரணங்களைச் சுட்டும் தொகுதியைத் தெரிவு செய்க.

(1) A, B, C (2) A, B, D (3) A, C, D
(4) B, C, D (5) B, D, E

**25.** முஸ்லிம் படை வீரர்கள் பயன்படுத்திய 'கவ்ஸா' என்ற சாதனம்

(1) மஞ்சனிக் கருவியாகும். (2) ஈட்டி ஆகும்.
(3) இரும்பிலான தலைக்கவசமாகும். (4) கவச வாகனமாகும்.
(5) கூடாரமாகும்.

**26.** ஜாஹிலியாக் கவிதைத் தொகுப்புக்கள் சில 'முஅல்லகாத்' என அழைக்கப்பட்டமைக்கான காரணம்

(1) அவை கஃபாவில் தொங்கவிடப்பட்டிருந்தமை ஆகும்.
(2) அவை தங்க எழுத்துக்களால் ஆக்கப்பட்டிருந்தமை ஆகும்.
(3) அவை பிரபல்யம் பெற்றிருந்தமை ஆகும்.
(4) அவை போட்டிகளில் வெற்றி பெற்றிருந்தமை ஆகும்.
(5) அவை காதல், வீரம் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தமை ஆகும்.

**27.** கண்டி இராசதானியில் 'ஒட்டுபந்திய' என்ற திணைக்களத்துக்கு வழங்கப்பட்ட பொறுப்பு

(1) போக்குவரத்து (2) மருத்துவ மேற்பார்வை (3) அரச சமையல் விவகாரம்
(4) மீன்பிடித்துறை (5) பாதுகாப்பு

**28.** மனிதன் அல்லாஹ்வின் பிரதிநிதி என்பதை உணர்த்தும் அறபுச் சொல்

(1) ஹுஜ்ஜதுல்லாஹ் (2) ரஸுலுல்லாஹ் (3) கலீபதுல்லாஹ்
(4) கராமதுல்லாஹ் (5) வலியுல்லாஹ்

[பக். 5 ஐப் பார்க்க

**29.** 'இஸ்லாமிய சட்டத்துறையின் இலக்குகள்' உட்பொதிந்துள்ள மூன்று பிரிவுகளும் முறையே
(1) உலூஹிய்யா, வாஸிலிய்யா, உமூமிய்யா
(2) ழரூரிய்யா, ரப்பானிய்யா, ஹாஜிய்யா
(3) அஸபிய்யா, கவ்மிய்யா, ஹாஷிமிய்யா
(4) ஹாஜிய்யா, ஸுமூலிய்யா, வாகிஇய்யா
(5) ழரூரிய்யா, ஹாஜிய்யா, தஹ்ஸீனிய்யா

- **30** தொடக்கம் **33** வரையிலான ஒவ்வொரு வினாவிலும் **X, Y** எனும் நிரல்களின் கீழ் தகவல்கள் சில தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் உள்ளவை **X** நிரலில் உள்ளவற்றுடன் ஏதேனும் ஒருவகையில் தொடர்புபட்டவை. இருப்பினும் அவை ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. **X** நிரலில் உள்ள விடயங்களுக்கேற்ப **Y** நிரலில் உள்ள விடயங்களை பொருத்தமான வகையில் ஒழுங்குபடுத்தும்போது அமையும் சரியான சேர்மானங்களைத் தெரிவுசெய்க.

**30.**

| | X | Y |
|---|---|---|
| 1. | நைஸாபூர் | A. முஹம்மத் இல்யாஸ் |
| 2. | கூபா | B. இப்னு ருஷ்த் |
| 3. | குர்துபா | C. இமாம் முஸ்லிம் |
| 4. | காந்தலா | D. இமாம் அபூஹனீபா |

(1) A, C, B, A (2) B, D, A, C (3) C, D, B, A
(4) C, B, D, A (5) D, A, C, B

**31.**

| | X | Y |
|---|---|---|
| 1. | சிறீ விக்ரம இராஜசிங்கன் | A. தளபதி தாகூர் |
| 2. | 1ம் புவனேகபாகு | B. நீதிபதி ராஜகருண கோபால |
| 3. | கீர்த்தி சிறீ ராஜசிங்கன் | C. தூதுவர் அபூ உஸ்மான் |
| 4. | புவனேகபாகு | D. மடிகே நிலமே மௌலா |

(1) A, B, C, D (2) B, C, D, A (3) B, A, D, C
(4) A, D, C, B (5) B, A, D, C

**32.**

| | X | Y |
|---|---|---|
| 1. | அபூ ஹனீபா தீனாவாரி | A. வானியல் |
| 2. | குவாரிஸ்மி | B. தாவரவியல் |
| 3. | அபூ உபைதா | C. விலங்கியல் |
| 4. | அல் - பதானி | D. மருத்துவம் |
| 5. | இப்னு ஸீனா | E. கணிதம் |

(1) A, E, C, B, D (2) B, E, C, A, D (3) A, C, B, D, E
(4) B, A, D, C, E (5) C, A, D, E, B

[பக். 6 ஐப் பார்க்க

**33.**

| | X | Y |
|---|---|---|
| 1. | உமர் (ரழி) | A. அமானுல் உம்மத் (சமூகக் காவலர்) |
| 2. | அஸ்ஹாபுஸ் ஸுப்பா | B. நபியவர்களின் யெமன் தேசத்துக்கான தூதுவர் |
| 3. | ஸைத் பின் ஸாபித் (ரழி) | C. மஜ்லிஸுஸ்ஸுராவை வடிவமைத்தல் |
| 4. | முஆத் பின் ஜபல் (ரழி) | D. கல்வி மேம்பாட்டுக்கான சமர்ப்பணம் |
| 5. | அபூ உபைதா அல்-ஜர்ராஹ் (ரழி) | E. அபரானி மொழியில் பரீட்சயம் பெற்றவர் |

(1) A, E, B, D, C (2) B, C, A, E, D (3) C, D, E, B, A
(4) D, A, B, C, E (5) E, C, A, D, B

**34.** அபூபக்ர் (ரழி) அவர்களால் தொகுக்கப்பட்ட 'முஸ்ஹப்' உஸ்மான் (ரழி) அவர்களால் பொறுப்பேற்கும் வரை பாதுகாப்பாக வைத்திருந்த ஸஹாபி அம்மையார்
(1) உம்மு ஸல்மா (ரழி) (2) பாத்திமா (ரழி) (3) ஆயிஷா (ரழி)
(4) ஹப்ஸா (ரழி) (5) ஸைனப் (ரழி)

**35.** "ஆண்கள் சம்பாதித்தவை ஆண்களுக்குரியன, பெண்கள் சம்பாதித்தவை பெண்களுக்குரியன" என்பது
(1) அல்-குர்ஆனின் கூற்றாகும். (2) நபி மொழியாகும்.
(3) இஜ்மா∴ ஆன தீர்ப்பாகும். (4) உம்முஹாதுல் மு∴மீன்களின் கருத்தாகும்.
(5) காரிஜீக்களின் கருத்தாகும்.

**36.** பின்வருவனவற்றுள் இசைக்கலை தொடர்பாக எழுதப்பட்டுள்ள நூல்
(1) அல்-முஸ்த∴மல் (2) இக்துல் பரீத் (3) கிதாப் அல்-மிக்யாஸ்
(4) ஸுரதுல் அர்ழ் (5) தாரீகுல் கபீர

**37.** இஸ்னாதில் அறிவிப்பாளர் எண்ணிக்கையைப் பொறுத்து அமையும் ஹதீஸ் வகைகளை மாத்திரம் உள்ளடக்கிய தொகுதி
(1) அல்-முஅல்லக், அல்-முர்ஸல், அல்-அரீப்
(2) அல்-முர்ஸல், அல்-ஹஸன், அல்-அஸீஸ்
(3) அல்-மவ்கூப், அல்-மஷ்ஹூர், அல்-மக்பூல்
(4) அல்-மஷ்ஹூர், அஸ்-ஸஹீஹ், அழ்-ழஈப்
(5) அல்-மஷ்ஹூர், அல்-அஸீஸ், அல்-அரீப்

**38.** அப்துல்லாஹ் பின் உரைகத் என்பவர் முஸ்லிம் அல்லாத நிலையில் நபி முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிய நிகழ்வு
(1) ஹில்புல் புழூல் உடன்படிக்கை ஆகும்.
(2) மதீனா ஹிஜ்ரத் பயணம் ஆகும்.
(3) அபீஸினியா ஹிஜ்ரத் ஆகும்.
(4) ஹுனைன் யுத்தம் ஆகும்.
(5) ஹுதைபிய்யா ஒப்பந்தம் ஆகும்.

**39.** பின்வருவனவற்றுள் மிகச் சரியானதைத் தெரிவுசெய்க.
(1) பத்து வருட யுத்த நிறுத்தம் என்பது மதீனா சாசனத்தின் நிபந்தனைகளுள் ஒன்றாகும்.
(2) லவ்ஹுல் மஹ்பூழ் → பைதுல் இஸ்ஸா → ஜிப்ரயில் (அலை) → முஹம்மத் (ஸல்) என்ற ஒழுங்கிலேயே அல்-குர்ஆன் வசனங்கள் அருளப்பட்டுள்ளன.
(3) நபிமார்களின் வருகை முற்றுப் பெற்றுள்ளவாறே முஜத்தித்களின் வருகையும் முற்றுப் பெற்றுள்ளது.
(4) அஹ்லுத் தௌஹீத் வல்-அத்ல் எனப்படுபவர்கள் மத்ஹப்களைப் பின்பற்றுவோராவர்.
(5) உமையா பின் ஹல்ப் என்பவர் மூலமே மக்காவில் சிலை வணக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**40.** "செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்ததே" என்ற இஸ்லாமிய சட்ட விதியை எடுத்துக்காட்டும் அறபுப் பிரயோகம்
(1) அல்-யகீனு லா யஸுலு பிஷ்ஷக்
(2) அல்-உமூறு பிமகாஸிதிஹா
(3) அல்-லரூராத் துபீஹுல் மஹ்லூராத்
(4) அல்-லரரு யுதாலு
(5) அல்-ஆதது முஹ்கமதுன்

**41.** பின்வரும் நிகழ்வுகளைக் கருத்திற் கொள்க.
A - தூமதுல் ஜன்தல் நிகழ்வு
B - அப்துல்லாஹ் பின் ஸபாவின் சதி
C - அலி (ரழி) - ஆயிஷா (ரழி) முரண்பாடு
D - காரிஜிகளின் தோற்றம்
E - உஸ்மான் (ரழி) அவர்களின் கொலை
மேற்படி நிகழ்வுகளைக் கால ஒழுங்கின் படி வரிசைப்படுத்தினால் சரியாக அமையும் தெரிவு யாது?
(1) A, B, C, D, E (2) B, E, C, D, A (3) C, E, A, D, B
(4) B, E, C, A, D (5) B, C, E, A, D

**42.** பின்வருவனவற்றுள் தவ்வாபீன்கள் பற்றிய மிகச் சரியான குறிப்பு யாது?
(1) ஹுஸைன் (ரழி) அவர்களைக் கைவிட்டு விட்டோம் எனக் கவலைப்பட்டவர்களாவர்.
(2) ஹஜ்ஜாஜ் பின் யூசுபின் ஆதரவாளர்களாவர்.
(3) அப்துல் மலிக் பின் மர்வானின் படைவீரர்களாவர்.
(4) அப்பாஸிய கிலாபத்தைத் தோற்றுவிப்பதில் தீவிரமாக ஈடுபட்டவர்களாவர்.
(5) அலி (ரழி) - பாத்திமா (ரழி) வழிவந்த குடும்ப உறுப்பினர்களாவர்.

**43.** ஸஹீஹுல் புஹாரி என்ற ஹதீஸ் நூலின் இரண்டு விளக்கவுரைகளைச் சுட்டும் தொகுதி
(1) நைலுல் அவ்தார் - இர்ஷாதுஷ்ஷாரி
(2) அல்-முஃனீ - புதுஹுல் ஐய்ப்
(3) இர்ஷாதுஷ்ஷாரி - பத்ஹுல் பாரி
(4) பத்ஹுல் பாரி - ஷரஹுல் வரகத்
(5) தாதுல் மஆத் - அல்-உம்மு

**44.** பின்வருவனவற்றுள் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) தப்ஸீர், தஃவீல் எனும் சொற்றொடர்கள் அல்-குர்ஆன் விளக்கவுரையுடன் தொடர்புபடுகின்றன.
(2) இஜ்திஹாத், காலத்தால் மட்டுப்படுத்தப்பட்ட விடயமொன்றாகும். அது அனைத்துக் காலத்துக்கும் ஏற்புடையதல்ல.
(3) மனிதன் தனது அறிவைப் பயன்படுத்தியே வாழ்வுக்கான அடிப்படைகளையும் கோட்பாடுகளையும் வகுத்துக்கொள்ள வேண்டுமென்பது இஸ்லாத்தின் வழிகாட்டலாகும்.
(4) மஹ்தியா, ரபீகா போன்ற நகரங்களை கலீபா ஹாறூன் ரஷீத் அவர்கள் நிர்மாணித்துள்ளார்.
(5) மதீனா நகரம் எதிரிகளால் தாக்கப்படும் போது அதனைப் பாதுகாக்க வேண்டிய முழுப் பொறுப்பும் முஸ்லிம்களைச் சார்ந்திருக்கும் என்பது மதீனா சாசன நிபந்தனைகளுள் ஒன்றாகும்.

**45.** பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தெரிவுசெய்க.
(1) அஸ்-ஸிகாயா, அல்-ஹிஜாபா ஆகியன ஜாஹிலியாக் காலத்தில் காணப்பட்ட இரண்டு திருமண ஒழுங்குகளாகும்.
(2) அஸ்மாஉர் ரிஜால், இல்முல் ஜரஹ் வத்தஃதீல் ஆகியன இஸ்லாமிய சட்டத்துறையுடன் தொடர்புடைய இரு கலைச் சொற்களாகும்.
(3) மஸ்ஜிதுல் குர்துபா, அல்-ஹம்ரா என்பன ஸ்பெய்னில் அமைக்கப்பட்ட கட்டடங்களாகும்.
(4) இமாம் புஹாரி, இமாம் திர்மிதி ஆகிய இருவரினதும் ஹதீஸ் தொகுப்புக்களை 'ஸஹீஹைன்' என அழைப்பர்.
(5) புவைஹித், செல்ஜுக் உமையாக்கால சிற்றரசுகள் ஆகும்.

- **46** தொடக்கம் **50** வரையிலான ஒவ்வொரு வினாவிலும் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. அச்சோடி கூற்றுகள் பற்றிய மிகப் பொருத்தமான தொடர்பைக் காட்டும் சரியான விடையினைப் பின்வரும் அட்டவணையிலுள்ள **இலக்கம்** (1), (2), (3), (4), (5) என்பவற்றிலிருந்து தெரிவுசெய்க.

| இலக்கம் | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | சரியானது | சரியானது |
| (2) | பிழையானது | சரியானது |
| (3) | சரியானது | பிழையானது |
| (4) | பிழையானது | பிழையானது |
| (5) | சரியானது | சரியாக இருப்பதுடன் முதலாம் கூற்றை மேலும் விளக்குகிறது |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **46.** | கலீபா ம.்.மூனின் காலத்தில், நாட்டு அபிவிருத்தியில் பெரும் செல்வாக்குச் செலுத்தியவர்கள் பர்மகீக்கள் ஆவர். | ரிஸாலத் ஒரு அறிவு மூலமாகும். புலன் மற்றும் பகுத்தறிவு மூலமாக அறிய முடியாதவற்றை, அறிந்து கொள்வதற்கு அது துணை செய்கின்றது. |
| **47.** | முஸ்லிம்களிடையே சமய சிந்தனைப் பிரிவுகள் தோற்றம் பெற பகுத்தறிவுச் சிந்தனையும் ஒரு காரணமாகும். | மௌழூஆத் ஆன ஹதீஸ்கள் கண்டனத்துக்குரியவையே அன்றி நிராகரிக்கப்பட வேண்டியவை அல்ல. |
| **48.** | இஸ்லாமிய த.்.வா வரலாற்றில் குறைஷிகளின் உடலியல் துன்பங்களுக்கு உட்படாத ஒருவராகவே அபூபக்ர் (ரழி) அவர்கள் இருந்துள்ளார்கள். | இஸ்லாமிய சாம்ராஜ்ய விரிவாக்கத்தில் அப்பாஸிய கலீபாக்களது பங்களிப்பை விட, உமையாக் கலீபாக்களின் பங்களிப்பே பிரதானமானதாகும். |
| **49.** | அறபுத் தீபகற்பத்துக்கு வெளியிலான நபியவர்களின் த.்.வா, ஹுதைபிய்யா உடன்படிக்கை காலத்திலேயே பலமடைந்துள்ளது. | ஸல்மான் அல் - பாரிஸ் (ரழி) நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் பால்குடித்தாய் ஹலீமா அம்மையாரின் புதல்வர்களுள் ஒருவராவார். |
| **50.** | டமஸ்கஸ் கைஸூன் மலையில் அமைக்கப்பட்ட வானிலை அவதான நிலையம் 'அர் - ரஸ்ம் அல் - மைமூனி' என அழைக்கப்படுகின்றது. | வட்ட ஒழுங்கையும் புள்ளிகளையும் உயிர்க்குறிகளையும் கொண்டதும் இலகுவாக வாசிக்க முடிந்ததுமான அறபு எழுத்துக்கள் 'அஸ் - ஸுலுஸ்' என அழைக்கப்படுகின்றன. |

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

**අ.පො.ස. (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2021 (2022)**

විෂයය අංකය / பாட இலக்கம்: 47 | විෂයය / பாடம்: **இஸ்லாமிய நாகரிகம்**

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

## I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 2 | 21. | 4 | 31. | 2 | 41. | 4 |
| 02. | 4 | 12. | 4 | 22. | 2 | 32. | 2 | 42. | 1 |
| 03. | 3 | 13. | 4 | 23. | 4 | 33. | 3 | 43. | 3 |
| 04. | 4 | 14. | 2 | 24. | 2 | 34. | 4 | 44. | 1 |
| 05. | 2 | 15. | 1 | 25. | 3 | 35. | 1 | 45. | 3 |
| 06. | 3 | 16. | 3 | 26. | 1 | 36. | 2 | 46. | 2 |
| 07. | 5 | 17. | 1 | 27. | 5 | 37. | 5 | 47. | 3 |
| 08. | 1 | 18. | 2 | 28. | 3 | 38. | 2 | 48. | 2 |
| 09. | 3 | 19. | 2 | 29. | 5 | 39. | 2 | 49. | 3 |
| 10. | 4 | 20. | 5 | 30. | 3 | 40. | 2 | 50. | 3 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 1 × 50 = 50

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

ඉස්ලාම් ශිෂ්ටාචාරය II
இஸ்லாமிய நாகரிகம் II
Islamic Civilization II

47 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள்:**

※ பகுதி I இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பகுதி II இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) 'இஜ்திஹாத்' என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.

(ii) சுருக்கமான அறிமுகத்துடன் மஸாதிர் அக்லிய்யாவுக்கு **இரண்டு** உதாரணங்கள் தருக.

(iii) இஜ்திஹாத், அனுமதிக்கப்பட்டது என்பதைக் குறிப்பிடும் அல் - குர்ஆன், அல் - ஹதீஸ் ஆதாரங்கள் **ஒவ்வொன்று** தருக.

(iv) இஜ்திஹாத் இன்திகாஈ, இஜ்திஹாத் இன்ஷாஈ பற்றி விளக்கம் தருக.

(v) "அல் - மஷக்கது தஜ்லிபுத் தைஸீர்" என்ற சட்ட விதி குறிப்பிடும் கருத்தை விளக்குக.

(4 × 5 = 20 புள்ளிகள்)

**2.** (i) வஹியின் அவசியத்தை எடுத்துக் காட்டும் **இரண்டு** நியாயங்களைத் தருக.

(ii) அல் - குர்ஆன் ஒரே தடவையில் அருளப்படாமைக்கான காரணங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(iii) தர்தீபுத் - திலாவத், தர்தீபுந் - நுஸுல் **இரண்டையும்** வேறுபடுத்திக் காட்டுக.

(iv) ஹதீஸ் ஒரு சட்ட மூலாதாரம் என்பதை எடுத்துக் காட்டும் அல் - குர்ஆன், அல் - ஹதீஸ் ஆதாரங்கள் **ஒவ்வொன்றைக்** குறிப்பிடுக.

(v) இஸ்லாமிய சட்டவாக்கத்தில் அல் - குர்ஆன் கையாண்டுள்ள படிமுறை **ஒன்றினை** உதாரணம் மூலம் விளக்குக.

(4 × 5 = 20 புள்ளிகள்)

**3.** (i) கிலாபத், முல்கிய்யத் எனும் சொற்றொடர்களைத் தெளிவுபடுத்துக.

(ii) உமையாக்கள் ஆட்சியைப் பெறுவதற்கு ஏதுவாயமைந்த **இரண்டு** காரணிகளைக் குறிப்பிடுக.

(iii) கலீபா வலீத் காலத்தில் இடம்பெற்ற ஸ்பெய்ன் வெற்றி பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

(iv) அப்பாஸியர் கால நகர மற்றும் கோட்டை நிர்மாணம் பற்றி **இவ்விரண்டு** உதாரணங்கள் தருக.

(v) அப்பாஸிய கிலாபத் பலம் இழந்தமைக்கான **நான்கு** காரணங்களை விளக்குக.

(4 × 5 = 20 புள்ளிகள்)

## பகுதி II

**4.** (i) புவியியல் துறை வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த **இரண்டு** முஸ்லிம் அறிஞர்களின் பணிகளை மதிப்பீடு செய்க.

(ii) உமையா, அப்பாஸிய காலங்களில் முஸ்லிம்களின் மொழி பெயர்ப்புத்துறைப் பங்களிப்பு பற்றி விபரிக்குக.

(10 × 2 = 20 புள்ளிகள்)

**5.** (i) போலி ஹதீஸ்கள் தோற்றம் பெற்றமைக்கான காரணங்களை எடுத்துக்காட்டுக.

(ii) ஹதீஸ் கலை விருத்தியில் இமாம்களான புஹாரி (ரஹ்), முஸ்லிம் (ரஹ்) ஆகியோரின் பங்களிப்புக்களை ஒப்பு நோக்குக.

(10 × 2 = 20 புள்ளிகள்)

**6.** (i) தப்ஸீர் கலை விருத்தியில் தாபிஈன்கள் காலப் பங்களிப்பை விபரிக்குக.

(ii) மு.்.தஸிலாக்களின் பிரதான கோட்பாடுகள் **ஐந்தையும்** தெளிவுபடுத்துக.

(10 ×2 = 20 புள்ளிகள்)

**7.** (i) ஒரு முஸ்லிம் தனது இரட்சகனுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதனால் அடையும் பயன்பாடுகளை விளக்குக.

(ii) பிற சமூகங்களுடன் கூடிவாழுதல் தொடர்பான இஸ்லாமியப் போதனைகளை விபரிக்குக.

(10 × 2 = 20 புள்ளிகள்)

**8.** (i) கி.பி. 7 ஆம், 8 ஆம் நூற்றாண்டுகளிலேயே இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாகியுள்ளமை பற்றி ஆதாரங்களுடன் விளக்கம் தருக.

(ii) கண்டி இராசதானியில் முஸ்லிம்கள் வழங்கிய சேவைகளைப் பட்டியற்படுத்தி அவற்றுள் **இரண்டு** துறைகள் பற்றி விளக்கம் தருக.

(10 × 2 = 20 புள்ளிகள்)

* * *

# பகுதி – I

**01**

**(i) இஜ்திஹாத் என்பதை வரைவிலக்கணப்படுத்துக**

- அல் இஜ்திஹாத் (الإجتهاد) எனும் சொல் இஜ்தஹத (إجتهد) என்ற வினையின் வினையடியாகும். ''அல் ஜுஹ்த்'' (الجُهْدُ) எனும் பதத்தில் இருந்து பிறந்ததுவே இஜ்திஹாத் ஆகும். முயற்சி, உழைத்தல், பாடுபடுதல், சிரமம், அர்ப்பணம் என்பன இதன் நேரடிக் கருத்தாகும். மொழிரீதியாக இப்பதம் ஏதேனும் ஒரு கருமத்தில் முழுப்பலத்தையும் பிரயோகித்து உழைப்பதைக் குறிக்கின்றது.

- இஸ்லாமிய பரிபாஷையில் இஜ்திஹாத் என்பது **''ஒரு சட்டப் பிரச்சினைக்கான தெளிவான விளக்கம் காணப்படாத போது, இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் ''ஷரீஅத்'' சட்டவாக்க மூலாதாரங்களின் அடிப்படையில் தமது சுய சிந்தனையைப் பயன்படுத்தி ஒரு முடிவுக்கு வருவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சியாகும்''** இம்முயற்சியில் ஈடுபடுபவர்கள் ''முஜ்தஹித்கள்'' என அழைக்கப்படுவர்.

**(04 புள்ளிகள்)**

**(ii) சுருக்கமான அறிமுகத்துடன் மஸாதிர் அக்லிய்யாவுக்கு இரண்டு உதாரணங்கள் தருக.**

- அல்குர்ஆன், அஸ்ஸுன்னா, (அல்இஜ்மா.ஃ) தவிர்ந்த ஏனைய இஸ்திஹ்ஸான், கியாஸ்....
  போன்ற துணை மூலாதாரங்கள் இரண்டைக் குறிப்பிட்டு சுருக்கமாக அறிமுகம் செய்தல்.

**(04 புள்ளிகள்)**

**(iii) இஜ்திஹாத் அனுமதிக்கப்பட்டது என்பதைக் குறிப்பிடும் அல்குர்ஆன், அல்ஹதீஸ் ஆதாரங்கள் இரண்டு தருக.**

**அல்குர்ஆன்**

- ''அல்லாஹ் உமக்கு காட்டித்தந்ததன் பிரகாரம் மக்களுக்கு மத்தியில் தீர்ப்பளிப்பதற்காக சத்தியத்தைக் கொண்டுள்ள இவ்வேதத்தை நாமே

- ''மேலும் அமைதியோ அல்லது பீதியோ பற்றிய ஏதேனும் ஒரு செய்தி அவர்களுக்கு வந்துவிட்டால் உடனே அவர்கள் அதனை வெளியே பரப்பி விடுகின்றனர். அவ்வாறு செய்யாது அவர்கள் அதனை அல்லாஹ்வின் தூதரிடமோ அவர்களில் மார்க்க அறிவுள்ள அதிகாரமுடையவர்களிடமோ தெரிவித்திருந்தால் அவர்களில் ஆய்ந்து எடுப்பவர்கள் அதனை நன்கு அறிந்து கொள்வார்கள்.'' (4:83)

**அல் - ஹதீஸ்**

- ‘‘ஒரு நீதிபதி தனது, இஜ்திஹாதைப் பயன்படுத்தி எடுக்கும் தீர்வு சரியாக அமைந்தால் இரு நன்மைகளும் தவறாக அமையுமாயின் ஒரு நன்மையும் கிடைக்கும் (புகாரி, முஸ்லிம்)

- முஆத் இப்னு ஜபல் (ரழி) அவர்கள் யெமனுக்கு அனுப்பப்பட்ட நிகழ்வு.

**(04 புள்ளிகள்)**

**(iv) இஜ்திஹாத் இந்திகாஈ, இஜ்திஹாத் இன்ஷாஈ பற்றி விளக்கம் தருக.**

- **அல் இஜ்திஹாத் அல் இன்திகாஈ**

தகுதிவாய்ந்த ஒரு சட்ட அறிஞரால் வழங்கப்பட்ட சட்டத்தீர்ப்புகளில் இருந்து அல்லது அவர்களால் தீர்ப்பளிக்கப்பட்ட விடயங்களில் இருந்து ஆழமான ஆய்வின் அடியாக நல்லதைத் தெரிவு செய்தல்

- **அல் இஜ்திஹாத் அல் இன்ஷாஈ**

தகுதிவாய்ந்த ஒரு முஜ்தஹித் புதியதொரு பிரச்சினை தொடர்பான சட்டத்தீர்ப்பில், அதற்கு முன் எவரும் வராத ஒரு தீர்ப்புக்கு வருதல் அல்லது இருந்த தீர்ப்புக்கு மாற்றமாக புதிய தீர்வொன்றுக்கு வருதல்.

**(04 புள்ளிகள்)**

**(v) “அல்மஷக்கது தஜ்லிபுத் தைஸீர்” என்ற சட்ட விதி குறிப்பிடும் கருத்தை விளக்குக.**

- சிரமம் சட்டங்களைத் தளர்த்தும்

(பிரயாணிகளுக்கு சேர்த்து தொழுவதற்கும், சுருக்கித் தொழுவ தற்குமான சழுகையை மேற்படி விதிக்கு உதாரணம் ஒன்றாகக் குறிப்பிடலாம்)

**(04 புள்ளிகள்)**

**02.**

**(i) வஹியின் அவசியத்தை எடுத்துக் காட்டும் இரண்டு நியாயங்களைத் தருக.**

- வஹியை ஏற்றுப் பின்பற்றுதல் தொடர்பாக அல்லாஹ் கட்டளையிட்டுள்ளமை.
- மனிதன் பகுத்தறிவு ரீதியாக அறிய முடியாத விடயங்களில் வழிகாட்டல்கள் வேண்டப்பட்டவனாக உள்ளமை.
- மனித வாழ்வை வகுத்துக்கொள்ள வஹியின் வழிகாட்டல் அவசியப்படுகின்றமை.
- மனிதன் தனது ஆன்மீக, ஒழுக்க, அற-நெறிக் கோட்பாடுகளை மனித அறிவால் மட்டும் ஒழுங்கமைத்துக்கொள்ள முடியாத நிலையில் வஹியின் வழிகாட்டலை வேண்டியுள்ளமை.

**(04 புள்ளிகள்)**

**(ii) அல்குர்ஆன் ஒரே தடவையில் அருளப்பட்டமைக்கான காரணங்கள் நான்கினைக் குறிப்பிடுக.**

- அல்லாஹ்வின் நாட்டமும் திட்டமும்
- படிமுறை ஒழுங்கு
- நபியவர்களின் உள்ளத்தை உறுதிப்படுத்தல்
- அல்லாஹ் தம்முடன் எந்த நேரமும் உள்ளான் என்பத எடுத்துக்காட்டல்
- இலகுவாக மனனம் செய்தல்
- குறைஷியர் மற்றும் ஏனையோரால் எழுப்பப்பட்ட வினாக்களுக்கு விடையளித்தல்
- தொடரந்தேர்ச்சியான தெய்வீக உரையாடல்

**(04 புள்ளிகள்)**

**(iii) தர்தீபுத் - திலாவத், ததீபுன் – நுஸூல் இரண்டையும் வேறுபடுத்திக் காட்டுக.**

| தர்தீபுத் திலாவத் | தர்தீபுன் நுஸூல் |
|---|---|
| 1. அல்லாஹ், ஜிப்ரீல் (அலை)ஊடாக அருளிய வசனங்கள் | அல்லாஹ், ஜிப்ரீல் (அலை) ஊடாக அருளிய வசனங்கள் |
| 2. ஓதப்படும் ஒழுங்கு | அருளப்பட்ட ஒழுங்கு |
| ஒழுங்கு | அல்குர்ஆன் வசனங்கள் அருளப்பட்ட ஒழுங்கு |
| 4. மன்ஸில், ருகூ:., ஸூரா என்ற ஒழுங்கில் காணப்படுகின்றமை | பகுதி, பகுதிகளாக வெவ்வேறாகக் காணப்படுகின்றமை.<br>தொடர் ஒழுங்கு ஸூரா, ருகூ:. பேணப்படாமை |

இவை போன்ற வேற்றுமைகள் எடுத்துக் காண்பிக்கப்படல்.

**(04 புள்ளிகள்)**

**(iv) ஹதீஸ் ஒரு சட்ட மூலாதாரம் என்பதை எடுத்துக்காட்டி அல்குர்ஆன், அல்ஹதீஸ் ஆதாரங்கள் ஒவ்வொன்றைக் குறிப்பிடுக.**

**அல்குர்ஆன்**

- அதீஉல்லாஹ் வஅதீஉர்ரஸூல்...
- வமா ஆதாகுமுர் ரஸூலு பகுதூஹு....

போன்றன

**அல் ஹதீஸ்**

- இரண்டு விடயங்களை விட்டுச் செல்கிறேன்.....
- யார் என்னைப் பின்பற்றுகிறாரோ அவர் அல்லாஹ்வைப் பின்பற்றியவராவார்
- எனக்கு அல்குர்ஆனும் அதைப் போன்ற ஒன்றும் வழங்கப்பட்டுள்ளன.

போன்றன

**(04 புள்ளிகள்)**

**(v) இஸ்லாமிய சட்டவாக்கத்தில் அல்குர்ஆன் கையாண்டுள்ள படிமுறை ஒன்றினை உதாரணம் மூலம் விளக்குக.**

- மது கட்டம் கட்டமாகத் தடை செய்யப்பட்டுள்ளமை
- அடிமை விடுதலை
- சமூக நீதி

போன்றன

உதாரணங்கள் ஊடாக எடுத்துக்காட்டப்படல்.

**(04 புள்ளிகள்)**

**03**

**(I) கிலாபத், முல்கிய்யத் எனும் சொற்றொடர்களைத் தெளிவுபடுத்துக.**

- கிலாபத் என்பது மக்கள் அங்கீகாரத்துடன் அமையும் ஆட்சி முறை.
- தகுதி, திறமை என்பன கருத்திற் கொள்ளப்பட்ட தெரிவு முறை.
- முல்கிய்யாத் என்பது குடும்ப மரபுக்கு அமைய வாரிசுரிமை கொண்ட மன்னராட்சி முறை.
- அரச குடும்ப மரபு என்ற ஒரே அம்சம் முதன்மைப்படுத்தப்பட்ட தேர்வு.

**(04 புள்ளிகள்)**

**(II) உமையாக்கள் ஆட்சியைப் பெறுவதற்கு ஏதுவாயமைந்த இரண்டு காரணிகளைக் குறிப்பிடுக.**

- ஹஸன் (ரழி) அவர்களின் விட்டுக் கொடுப்பு
- உஸ்மான் (ரழி) அவர்களின் கொலையும் கொலையாளிகளை கண்டு பிடித்து தண்டனை வழங்குவதில் ஏற்பட்ட தாமதமும்.
- ஸிப்பீன் மற்றும் நகர்வான் யுத்தங்களின் போது அலி (ரழி) அவர்களின் தரப்பில் ஏற்பட்ட அதிருப்தி.
- தூமதுல் ஜன்தல் தீர்ப்பை முஆவியா (ரழி) தனக்குச் சாதகமாக அமைத்துக் கொண்டமை.
- சிரியா தேசத்தின் கவர்ணராக முஆவியா (ரழி) கலீபா உஸ்மான் (ரழி) அவர்களால் நியமிக்கப்பட்டமையும் அலி (ரழி)அவர்கள் காலத்தில் சிரியா, எகிப்து நிர்வாகம் முஆவியா (ரழி) வசம் இருந்தமையும்.
- சிரியாவில் தனக்கென ஆதரவாளர்கள் குழுவொன்றை ஏற்படுத்திக் கொண்டமை.

**(04 புள்ளிகள்)**

**(III)கலீபா வலீத் காலத்தில் இடம் பெற்ற ஸ்பெய்ன் வெற்றி பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுக.**

- ஸ்பெய்ன் சுதேச மக்களின் அழைப்பு
- மூஸா பின் நுஸைர், தாரிக் பின் ஸியாத் போன்றோரின் பங்களிப்பு
- முஸ்லிம் படையணிக்கு சுதேச மக்களால் கிடைக்கப்பெற்ற ஆதரவு.

இவை போன்ற கருத்துக்கள் எழுதப்பட்டிருத்தல்

**(04 புள்ளிகள்)**

**(IV)அப்பாஸியர் கால நகர மற்றும் கோட்டை நிர்மாணம் பற்றி இவ்விரண்டு உதாரணங்கள் தருக.**

**கோட்டைகள்**

- கலீபா மன்சூர் - கஸ்ருல் ஹுல்த்
- கலீபா ஜஃபர் அல் மன்சூர் – கஸ்ருத் தஹப்
- கலீபா வாஸித் - கஸ்ருல் ஹாரூனி

**நகரங்கள்**

- கலீபா மன்சூர் – பக்தாத்
- கலீபா மன்சூர் – ரபீகா, மஹ்தியா
- கலீபா முஃதஸிம் - ஸமர்ரா

**(04 புள்ளிகள்)**

**(V) அப்பாஸிய கிலாபத் பலம் இழந்தமைக்கான நான்கு காரணங்களை விளக்குக.**

1) பலவீனமான அரசியல் தலைமைத்துவம்
2) சிற்றரசுகளின் தோற்றம்
3) அந்நியர்களின் திட்டமிட்ட சதி
4) தாத்தாரியர் படையெடுப்பு
5) முழுமை பெறாத நில வெற்றிகள்
6) சமய உட் பிரச்சினைகள்
7) கோத்திர முரண்பாடு

போன்றன.

**(அரசியல், சமய, சமூக, பொருளாதார காரணிகள் அடிப்படையில் அடையாளப்படுத்தப்பட்டு விளக்கம் அளிக்கப்படல்.)**

**(04 புள்ளிகள்)**

## பகுதி 11

04

**(i) புவியியல் துறை வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்த இரண்டு முஸ்லிம் அறிஞர்களின் பணிகளை மதிப்பீடு செய்க.**

- அல்குவாரிஸ்மி,
- அல்பிருனி ………..
  போன்ற புவியல் துறை அறிஞர்களின்
  - அறிமுகம்
  - கண்டு பிடிப்புக்கள்
  - நூலாக்கம்
    போன்றன எடுத்துக்காட்டப்படல்.

**(10 புள்ளிகள்)**

**(ii) உமைய, அப்பாஸிய காலங்களில் முஸ்லிம்களின் மொழி பெயர்ப்புத்துறைப் பங்களிப்பு பற்றி விபரிக்குக.**

- அறிவு ஆராய்ச்சி பற்றிய இஸ்லாத்தின் தூண்டுதல்
- இந்திய, கிரேக்க, பாரசீக நூற்களில் காணப்பட்ட அறிவுசார் தரவுகளை பெற்றுக் கொள்ளும் ஆர்வம்
- நாகரிகத்தின் அடையாளமாக அறிவை விருத்தி செய்ய வேண்டும் என்ற ஆர்வமும் அதில் ஏற்பட்ட ஈடுபாடும்.
- உமையா கலீபா அப்துல் மலிக் பின் மர்வான் காலத்தில் மொழிபெயர்ப்பு முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டமை.
- அப்பாஸியர் காலத்தில் பைதுல் ஹிக்மா வழங்கிய பங்களிப்பு
- மொழி பெயர்ப்பு முயற்சியின் போது கருத்து விமர்சனம், புதிய கருத்துக்கள் முன்வைப்பு இடம் பெறல்

  இது போன்ற கருத்துக்கள் எழுதப்பட்டிருத்தல்

**(10 புள்ளிகள்)**

**05.**

**(i) போலி ஹதீஸ்கள் தோற்றம் பெற்றமைக்கான காரணங்களை எடுத்துக் காட்டுக**

(அரசியல், பொருளாதார, சமய காரணிகளை வேறுபடுத்தி விளக்குதல்)

- கொள்கைத் தீவிரம்
- நன்மையை ஊக்கப்படுத்துதல் என்ற நினைப்பு
- ஸிந்தீக்களின் நடவடிக்கை
- மொழி, இனம், மத்ஹப் மீதான வெறி
- பொருளாதார நலன், போட்டி
- பிரபல்யம்
- ஆட்சியாளரின் அன்பளிப்புப் பெறல்

போன்றன எழுதப்பட்டிருத்தல்

**(10 புள்ளிகள்)**

**(ii) ஹதீஸ் கலை விருத்தியில் இமாம்களான புகாரி (ரஹ்), முஸ்லிம் (ரஹ்) ஆகியோரின் பங்களிப்புக்களை ஒப்பு நோக்குக.**

கீழ்வரும் அம்சங்கள் ஒப்பு நோக்கப்படல்

- அறிமுகம்
- கிரந்தம்: ஜாமிஉஸ் ஸஹீஹ் அல் புகாரி, ஜாமிஉஸ் ஸஹீஹ் அல் முஸ்லிம்
- ஹதீஸ்களின் எண்ணிக்கை
- ஹதீஸ்களை வகைப்படுத்துவதற்கான நிபந்தனைகள், திறனாய்வு முறை
- ஆதாரபூர்வமான ஹதீஸ்கள், நிபந்தனைகள், விதிகள்
- முத்தபக்குன் அலைஹி
- கணிப்பு அங்கீகாரம்
- அல்குர்ஆனுக்கு அடுத்த பலமான ஆதராரமாகக் கருதப்படல்.

**(10 புள்ளிகள்)**

**06.**

**(i) தப்ஸீர் கலை விருத்தியில் தாபிஈன்கள் காலப் பங்களிப்பை விபரிக்குக.**

- நபித் தோழர்களைப் போலவே அல்குர்ஆனை விளங்குவதிலும் விளக்குவதிலும் தாபிஈன்கள் அதிக கவனம் செலுத்தினர்.
- தாபிஈன்கள் அல்குர்ஆன் மற்றும் அல்ஹதீஸ் வசனங்களில் தெளிவு கிடைக்கப்பெறாத விடயங்களில் நபித்தோழர்களை நாடியதோடு இஜ்திஹாதையும் கைக் கொண்டு அல்குர்ஆனை விளங்கியுள்ளனர்.
- சாம்ராஜ்ய விரிவாக்கத்தைத் தொடர்ந்து தம் சொந்த இடங்களில் இருந்து வெளியேறிய மக்கா, மதீனா, ஈராக் போன்ற இடங்களில் காணப்பட்ட தப்ஸீர் வகுப்புக்களில் இணைந்து தம் அறிவை விரிவு படுத்திக் கொண்டனர்.
- தாபிஈன்களின் தப்ஸீர்கள் தப்ஸீர் பில் மஃஸூர், தப்ஸீர் பில் மஃகூல் ஆகிய இருவகையையும் சார்ந்ததாய் அமைந்துள்ளன.
- மக்கா தப்ஸீர் வகுப்பில் ஸயீத் பின் ஜுபைர், முஜாஹித், இக்ரிமா போன்றவர்களும் மதீனா வகுப்பில் ஸைத் பின் அஸ்லம், அபுல் ஆலியா போன்றவர்களும் ஈராக் வகுப்பில் ஹஸனுல் பஸரி, அல்கமா போன்றவர்களும் தப்ஸீர் துறையில் பிரசித்தி பெற்ற தபஉத்தாபிஈன்களாவர்.
- பிற்காலத்தில் தப்ஸீர் கலையில் பிரபல்யம் பெற்ற இமாம் தபரி, இமாம் சுயூதி, இபுனு கஸீர் போன்ற இமாம்களின் தப்ஸீர்களில் தபஉத்தாபிஈன்களின் கருத்துக்கள் பெருமளவு உள்வாங்கப்பட்டுள்ளன.
- அகீதாவில் ஏற்பட்ட முரண்பாடுகள், இஸ்ராஈலிய்யத்துக்கள் போன்றவற்றின் ஆதிக்கமும் தாபிஈன்களின் தப்ஸீர்களில் அவதானிக்கப்படுகின்றன.

**(10 புள்ளிகள்)**

**(ii) முஃதஸிலாக்களின் பிரதான கோட்பாடுகள் ஐந்தையும் தெளிவு படுத்துக.**

- அத்தௌஹீத்
- அல் அத்ல்
- அல்மன்ஸிலது பைனல் மன்ஸிலதைன்
- அல் வஃது வல் வயீத்
- அல் அம்ரு பில் மஃரூபி வன் நஹ்யி அனில் முன்கரி

**(10 புள்ளிகள்)**

**07.**

**(i) ஒரு முஸ்லிம் தனது இரட்சகனுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதனால் அடையும் பயன்பாடுகளை விளக்குக.**

- ஆன்மீக மேம்பாடு
- நம்பிக்கை உறுதிப்பாடு
- சகிப்புத் தன்மை, பொறுமை
- துணிவு, தைரியம் விருத்தி
- மன ஆறுதல் மற்றும் திருப்தி
- விரக்தி, மனச் சோர்வு, மன அழுத்தம் நீக்கம்
- நல்லவற்றின் மீதான ஆர்வம்
- தீயன மீதான வெறுப்பு
- மக்கள் ஐக்கியம் - பரஸ்பர உதவி
- நீதி, நேர்மை மேம்பாடு ..................
  இவை போன்றன

**(10 புள்ளிகள்)**

**(ii) பிற சமூகங்களுடன் கூடிவாழுதல் தொடர்பான இஸ்லாமிய போதனைகளை விளக்குக.**

(பிற சமூகத்தவர்களுடன் கூடி வாழுதல் தொடர்பான இஸ்லாத்தின் வழிகாட்டுதல்கள். அல்குர்ஆன், அல்ஹதீஸ் போதனைகளை மையமாகக் கொண்டு அமைந்துள்ளன.)

- மனிதர்கள் ஓர் ஆன்மாவில் இருந்து அல்லாஹ்வினால் படைக்கப்பட்டவர்களாவர்.
- மனிதர்கள் விஷேடமான கண்ணியத்தையும் கௌரவத்தையும் கொண்டவர்களாவர்.
- ஒவ்வொருவருக்கும் சுதந்திரம் மற்றும் விருப்பத்தேர்வு உண்டு.
- மானிட சமூகத்துக்கு பரஸ்பரம் நன்மை பயப்பது ஒவ்வொரு மனிதர் மீதும் உள்ள கடமையாகும்.
- மனித சகோதரத்துவம் இஸ்லாத்தின் அடிப்படைகளில் பிரதானமானதாகும்.

டும்

வேறுபாடுகள் இறைநியதிக்கேற்ப அமைவதாகும்.

- மனிதாபிமான உதவிகள் அனைத்து மனிதர்களும் எவ்வித வேறுபாடுமின்றி மேற்கொள்வது இஸ்லாத்தின் அடிப்படையாகும்.
- மனிதர்கள் அனைவரும் சமமானவர்கள், நீதிக்கு முன் சமத்துவமானவர்கள்.
- சக வாழ்வின் போது எவருக்கும் பாதகம் ஏற்படாத விதத்தில் இஸ்லாத்தில் தனித்துவம் பேணப்படல் அவசியம்.

- சகவாழ்வு நல்லிணக்கம் - இஸ்லாமிய வரலாற்றின் உதாரணங்கள், சம்பவங்களை எடுத்துக்காட்டல்.

இவை போன்ற கருத்துக்கள் எழுதப்பட்டிருப்பின்.

**(10 புள்ளிகள்)**

**08.**

**(i) கி.பி. 7ம் நூற்றாண்டுகளிலேயே இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாகி உள்ளமை பற்றி ஆதாரங்களுடன் விளக்கம் தருக.**

(இஸ்லாத்தின் ஆரம்ப காலத்திலேயே 7ம், 8ம் நூற்றாண்டுகளில் இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாகியுள்ளது என்பதனை எடுத்துக் காட்டும் சான்றுகள் உள்ளன.)

- இலங்கையின் அமைவிடமும், பட்டுப்பாதையில் இலங்கையின் முக்கியத்துவமும்
- கடல், வணிகப் பாதையில் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு இலங்கை பல்வேறு வகைகளில் சாதகமாக அமைந்தமை.
- அரேபியர் உட்பட உலக மக்கள் வர்த்தகம், சுற்றுலா போன்ற நோக்கங்களுக்காக இலங்கையைத் தரிசித்தமை
- நபியவர்களின் தூதுவர் வஹப் இப்னு அபீ கப்ஷா அவர்கள் இலங்கை வந்ததாகவும், இலங்கை மன்னனுக்கு இஸ்லாத்துக்கு அழைப்பு விடுத்ததாகவும் குறிப்பிடப்படும் தகவல்.
- புதை பொருள் ஆய்வுகள் அரபுக் கல்வெட்டுக்கள் காட்டும் ஆதாரங்கள்
- இலங்கை மன்னனின் தூது பற்றிய அஜாஇபுல் ஹிந்த் எனும் நூலில் இப்னு ஷஹ்ரயார் தரும் தகவல்
- உமையா ஆட்சியில் ஹஜ்ஜாஜ் இப்னு யூஸுபின் கொடுமைக்கு அஞ்சி ஹாஷிமீக்களில் சிலர் இலங்கையில் தஞ்சமடைந்திருந்தனர் என Sir Allexander Johnston குறிப்பிடும் தகவல்
- கி.பி. 8ம் நூற்றாண்டளவில் இலங்கையை ஆண்ட மன்னன் அரபு விதவைப் பெண்கள் சிலரை டமஸ்கஸுக்கு அனுப்பி வைத்ததாகக் புதூஹுல் புல்தான் தரும் தகவல். (சிந்துப் படையெடுப்புக்கும் மேற்படி சம்பவம் காரணமாய் அமைந்துள்ளது)

மேற்படி தரவுகள் முன்வைக்கப்பட்டிருத்தல்

**(10 புள்ளிகள்)**


Past Papers Wiki - Download More Past Papers and Study Well!

(ii) **கண்டி இராசதானியில் முஸ்லிம்கள் வழங்கிய சேவைகளைப் பட்டியற்படுத்தி அவற்றுள் இரண்டு துறைகள் பற்றி விளக்கம் தருக.**

- அரசியல் துறை
- பொருளாதாரத் துறை
- பாதுகாப்புத் துறை
- மருத்துவத்துறை
- போக்குவரத்து, மீன்பிடித்துறை
- அரச மாளிகை நிர்வாகம்

மேலுள்ளவற்றுள் **மாணவர்கள் தாம் விரும்பிய இரண்டு** துறைகளுக்கான **முஸ்லிம்களின் பங்களிப்புக்களையும்** அவற்றுக்காக முஸ்லிம்களுக்குக் கிடைக்கப் பெற்ற **பதவிகள், நில-புல அன்பளிப்புக்கள்** பற்றியும் தெளிவாக எடுத்துக்காட்டல்..

**(10 புள்ளிகள்)**

WWW.PastPapers.WIKI



Past Papers Wiki - Download More Past Papers and Study Well!